# நீங்கள் மார்த்தாளா அல்லது மரியாளா?



# நீங்கள்
# மரியாளா (அ) மார்த்தாளா?

***Christian Questions* என்னும் வலையொலியில், நவம்பர் 26, 2018 அன்று ஒலிப்பரப்பப்பட்ட நிகழ்வு #1049 – இன் தமிழாக்கம்**

**தொகுப்பாளர்: ரிக் மற்றும் ஜொனாதன் அவர்கள்**

**Copyright :**

***Christian Questions.com***

**Tamil Translated by :**

***www.foodfornewcreature.com***



**லூக்கா 10:41 – 42: (திருவிவிலியம்) ஆண்டவர் அவரைப் பார்த்து, “மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள்; அது அவளிடமிருந்து எடுக்கப்படாது” என்றார்.**

**சிறப்பு விருந்தினர்: Christian Questions (CQ) வலையொலி குழுவின் உறுப்பினர், அபிகாயில் லெட்விங்கா (Abigail Ledwinka) அவர்கள்**

*தவிர்க்க முடியாத உண்மையை எதிர்கொள்ளவோம் வாருங்கள் – என்னவெனில், வேதாகமம் உண்மையில் ஆடவர்கள் மீதே அதிக கவனம் செலுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆதாம் ஏவாளுக்கு முன் சிருஷ்டிக்கப்பட்டார், நோவா மனுக்குலத்தைக் காப்பாற்றியிருக்கிறார், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரே இஸ்ரயேல் தேசத்தின் முற்பிதாக்களாக இருந்தார்கள். தீர்க்கதரிசிகளும், இயேசுவும் அப்போஸ்தலர்களும் ஆகிய அனைவருமே ஆடவர்கள். இப்படியிருக்க, இது வேதாகம ஸ்திரீகளுக்கு எந்தப் பங்கினை / வாய்ப்பினை விட்டுச்செல்கின்றது? இதற்கான பதில் உண்மையிலேயே ஆச்சரியமாக தான் உள்ளது!*

*என்னவெனில், வேதாகமம் வழங்கும் மிகவும் வல்லமைவாய்ந்த மற்றும் குறிப்பிடத்தக்க பாடங்களை அமைதியாக நமக்குக் கற்றுக்கொடுக்கின்றவர்களாய் வேதாகம ஸ்திரீகள் இருக்கின்றார்கள். இந்தப் பாடங்களைக் கண்டறிவதென்பது, ஆழமான வேதாகம சத்தியங்களைத் தெளிவாக வெளிப்படுத்தும் அரிய மற்றும் குறிப்பிடத்தக்க தொல்பொருள் கலைப்பொருட்களைக் கண்டுபிடிப்பது போன்றதாகும். அப்படிப்பட்ட பாடங்களைத் தான், லாசருவின் சகோதரிகளும், இயேசுவின் நெருங்கிய சிநேகிதிகளுமாகிய மரியாள் மார்த்தாளிடமிருந்து நாம் பெற்றுக்கொள்கின்றோம். இயேசுவுடனான அவர்களின் உரையாடல்களும்,*

*செயல்பாடுகளும், அவரது வாழ்க்கையில் அவர்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தைப் பற்றி மாத்திரமல்லாமல், நமது வாழ்விலும் அவர்கள் நீடித்த இடத்தைப் பெற்றிருக்கிறார்களென்பது பற்றியும் பேசுகின்றன.*

*வேதாகம ஸ்திரீகளைப் புரிந்துகொள்வதற்கு, வேதாகமக் காலத்தின் கலாச்சாரத்தை நாம் புரிந்துகொள்வதோடு மாத்திரமல்லாமல், ஒரு பெண்ணின் கண்ணோட்டத்திலிருந்து நாம் அதனைக் கேட்பது நலமாயிருக்கும். நம்மிடம் இன்று இரண்டு சிறப்பு விருந்தினர்கள் உள்ளார்கள்; அவர்கள் பண்டைய கலாச்சாரத்தையும் தற்காலத்திய பெண்ணினுடைய புரிதலையும் நம்முடன் பகிர்ந்துகொள்ளப்போகின்றார்கள்.*


*இன்று நம்முடன் இணைவது நமது C Q தன்னார்வலர் ஜூலி (Julie):*

> *ஜூலி :- நான் ஒரு வேதாகம மாநாட்டிற்குச்* ***(Bible conference)*** *சென்றிருந்தபோது, ஒரு மகளீர் குழுவுடன் இருக்க நேர்ந்தது; அப்போது அவர்கள் என்னிடம், ஏன்* ***Christian Questions*** *வலையொலியானது ஒருபோதும் வேதாகம ஸ்திரீகளை முன்னிலைப்படுத்தும் ஒரு நிகழ்ச்சிகூட செய்ததில்லை என்று கேட்டார்கள். அதற்கு நான், “அது உண்மையாக இருக்க முடியாது! அவர்கள் ஒரு நிகழ்ச்சியை நடத்தினார்களே... தலைப்பும்கூட .... ஹ்ம்ம்” என்று யோசித்தேன். அவர்கள் சொன்னது உண்மைதான்! 20 ஆண்டுகளுக்கும் மேலான தங்களது ஒளிபரப்பில், தாங்கள் ஒருபோதும் ஒரு வேதாகம ஸ்திரீ குறித்து பேசும் ஒரு நிகழ்ச்சிகூட செய்ததில்லை. ஆக, எங்களில் ஒரு குழு இதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய முடிவெடுத்தோம், மேலும் வேதாகம ஸ்திரீகளிடமிருந்து இன்னும் பல பாடங்களை வெளிக்கொணர்வோமென்றும் நம்புகின்றோம்; ஏனெனில், இப்பாடங்களனைத்தும், இன்றைய ஆண்களுக்கும் பெண்களுக்குமான ஆழ்ந்த அர்த்தத்தினைப் பெற்றிருக்கின்றன.*

***இந்த இரண்டு சகோதரிகளைப் பற்றிய முதல் முக்கியமான விஷயம் ஆதார வசனத்தின் விவரத்தில் காணப்படுகின்றது:***

***லூக்கா 10:41 – 42: (திருவிவிலியம்) ஆண்டவர் அவரைப் பார்த்து, "மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள்; அது அவளிடமிருந்து எடுக்கப்படாது" என்றார்***

ஏன் பெயரைத் திரும்ப அழைக்க வேண்டும்? ஒருவேளை இதுவொரு பொதுவான வேதாகம நடைமுறையோ?
இல்லை !! முழு வேதாகமத்திலேயே இம்மாதிரி பத்து தரம் மாத்திரமே நிகழ்ந்துள்ளன :



1. **ஆபிரகாமே, ஆபிரகாமே (ஆதியாகமம் 22:11)**
2. **யாக்கோபே, யாக்கோபே (ஆதியாகமம் 46:2)**
3. **மோசே, மோசே (யாத்திராகமம் 3:4)**
4. **சாமுயேலே சாமுயேலே (1 சாமுயேல் 3:10)**
5. **மார்த்தாளே, மார்த்தாளே (லூக்கா 10:41)**
6. **சீமோனே, சீமோனே (லூக்கா 22:31)**
7. **சவுலே, சவுலே (அப்போஸ்தலர் 9:4)**
8. **கர்த்தாவே! கர்த்தாவே! (மத்தேயு 7:21, 22; 25:11; லூக்கா 6:46; 13:25)**
9. **எலோயீ! எலோயீ! (மாற்கு 15:34; மத்தேயு 27:46; சங்கீதம் 22:1)**
10. **எருசலேமே, எருசலேமே (மத்தேயு 23:37; லூக்கா 13:34)**

*இயேசு மார்த்தாளின் பெயரை இரண்டுதரம் கூறியிருக்கின்றார். இயேசு மார்த்தாளின் பெயரைத் திரும்பக் கூறினதன் முக்கியத்துவம் என்னவாக இருக்கும்?*

***ஜூலி** :-*

***'ஆபிரகாமே, ஆபிரகாமே'*** *– எனும்போதுதான் தேவன் ஆபிரகாமை ஈசாக்கைப் பலியிடுவதிலிருந்து தடுத்து நிறுத்தினார், ஏனெனில், இது தேவன் தமது குமாரனாகிய இயேசுவைப் பலியிடுவதற்கான ஒப்பீட்டு நிழலாக*

*இருந்தது. ஆனால் நிழலிலும் அவ்வாறே பலியிடப்பட்டிருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை.*

**'மோசே, மோசே'** *– எனும்போதுதான், உலக வரலாற்றிலேயே ஒரேதரம் நிகழ்ந்ததான, எரியும் முட்செடியின் நடுவிலிருந்து தேவன் மோசேயிடம் பேசினார்.*

*மேலும், விரைவில் மாபெரும் அப்போஸ்தலனாகிய பவுல் என ஆகவிருந்த ஒருவருடைய மனசாட்சியை இயேசு அழைத்ததுதான்,* **'சவுலே, சவுலே'** *– என்பதாகும்.*

*இவையெல்லாம் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்! இதில், சிலுவையில், நம்முடைய பரமபிதாவை நோக்கி கூப்பிடும் இயேசுவும்கூட வருகின்றார். வேதாகமத்தில் நாமந்தரிப்பிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஜனங்களில், மார்த்தாள், பிரதான 10 நபர்களில் ஒருவராக இடம்பெறுகின்றார்! அந்தப் பட்டியலிலுள்ள ஒரே பெண்மணி இவர்தான் என்பதைக் கவனியுங்கள் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே! இது எப்படியிருக்கின்றதென்றால், இதனை நோக்கி ஒரு மாபெரும் அம்புக்குறியிட்டு, "என்னை வாசியுங்கள்! இங்கே முக்கியமான ஏதோவொரு விஷயமிருக்கின்றது!" என்று நமக்குப் பளிச்சிடுவது போலிருக்கின்றது.*

*ஒரு பெயர் இரண்டுதரம் பேசப்பட்டதென்றால், அது உண்மையில் ஒருவரின் கவனத்தை (நம்முடைய கவனத்தையும்கூட) ஈர்ப்பதற்காகவும், ஒரு விசேஷித்த கருத்தைத் தெரிவிப்பதற்காகவும் (அ) நெருக்கத்திற்கான ஒரு எபிரெய வாக்கிய வெளிப்பாடாகவும் இருந்தது. மார்த்தாளிடம், சீமோனாகிய பேதுருவிடம், சவுலிடம் மற்றும் எருசலேமிடம் இயேசு இருமுறை பெயரைச் சொன்னதென்பது, தாம் ஆழமாய் நேசித்தவர்களுக்கான இயேசுவினுடைய ஆழமான அக்கறையின் வார்த்தைகளாக இருந்தன. இந்தப் பத்து நிகழ்வுகளில் ஒன்றாக மார்த்தாள் இருப்பதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?*

*ஜூலி :- ஏபி (Abby) அவர்களே, தங்களை Christian Questions – க்கு*

வரவேற்கிறோம். இந்த வலையொலிக்குத் தூண்டுதலாகயிருந்தப் பெண்களில் அபிகாயிலும் (Abigail) ஒருவர். ஏபி, வேதாகம ஸ்திரீகளைக் குறித்து சில வலையொலிகளை நிகழ்த்துவது பற்றி நாங்கள் உங்களிடம் முதன்முதலாகப் பேசியபோது, தாங்கள் ‘அபிகாயில்’ பற்றி ஆராய்ச்சி செய்வதில் ஆர்வமாக இருந்தீர்கள். பிறகு, ஏன் தங்கள் மனதை மாற்றிக்கொண்டு, மரியாள் மார்த்தாளின் கதைகள்மீது தங்கள் தியான கவனத்தைச் செலுத்தினீர்கள்?

ஏபி (Abby) :- உண்மையில், மரியாள் மார்த்தாளின் கதையானது, நீண்ட காலமாகவே, அதாவது, நான் ஒரு பதின்வயது பெண்ணாக இருந்தபோதிலிருந்தே நான் ஆச்சரியப்பட்ட ஒரு கதையாகும். இக்கதையில் இன்னுமதிகமாக ஏதேனும் காரியமிருக்கின்றதா என்று நானும் எனது தாயாரும் எப்போதும் ஆச்சரியப்பட்டிருக்கின்றோம். மார்த்தாள் தன்னுடைய பிரதான முன்னுரிமைகள் எதுவென்று சரிவர அறியாத சகோதரியென எப்போதுமே கீழாகப் பார்க்கப்பட்டு, “இப்படிப்பட்டவராக நீங்கள் இருந்துவிடாதீர்கள்” என்று குறிக்கப்படும் நபராக இருந்துள்ளாள். மரியாள் தனக்கு உதவ வேண்டுமென்று இயேசுவிடம் கேட்டுக்கொண்ட ஒரு சம்பவத்தைக்காட்டிலும், மார்த்தாளிடம் வேறு அதிகமான காரியம் கண்டிப்பாக இருக்குமென்று நானும் எனது தாயாரும் நினைத்தோம். ஆராய்ச்சிக்குப் பிறகோ, மார்த்தாள் எனக்கு விசுவாசத்தின் நட்சத்திரமாக / வீராங்கனையாக இருக்கிறாள்.

ஜூலி :- மரியாள் தான் எப்போதும் கவனமனைத்தையும் பெறுகிறாள் என்பதாகத் தெரிகின்றது.

நமக்கு அருமையான முன்மாதிரிகளாக இருக்கும் மரியாள் மார்த்தாள் பற்றிய விலையேறப்பெற்ற காரியங்களை வெளிக்கொணர்வதற்கு, இந்த வலையொலி முழுவதும் ஜூலி, ஏபி அவர்களுடன் இணைந்துப் பேசப்போகிறோம்.

**மரியாளும் மார்த்தாளும் இயேசுவின் இருதயத்திலேயே குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்திருந்தார்கள்**

## *வேதாகமத்தில் மரியாளும் மார்த்தாளும் எவ்வளவு தரம் வருகிறார்கள்? அவர்களின் ஜீவியங்களானது அவர்களையும், நம்மையும் பற்றி எதனை நமக்குக் கற்றுக்கொடுக்கின்றன?*

*வேதாகம ஸ்திரீகளைப் பார்க்கத் துவங்குவதற்கு முன், இந்த இரண்டு சகோதரிகளை முன்னிலைப்படுத்துவது நமக்கு ஒரு முக்கியமான வேதாகம அஸ்திபாரத்தை அமைத்துக்கொடுக்கும். இயேசு யாரையாவது (அ) எதையாவது கூர்ந்துநோக்குகின்றார் எனும்போது, கிறிஸ்தவர்களாகிய நாமும் அதைக் கவனத்தில் கொள்வது மாத்திரமல்லாமல், உடனடியாக அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றவும் வேண்டும். இப்போது அவர் பார்த்ததை நாமும் பார்க்க முயற்சிக்கலாம் வாருங்கள்.*

***மரியாளும் மார்த்தாளும் மூன்று பதிவுகளில் வருகிறார்கள்:***

***1. மார்த்தாள் பணிவிடைசெய்தல் – லூக்கா 10:38 – 42***

***2. லாசருவை உயிர்த்தெழுப்புதல் – யோவான் 11***

***3. மார்த்தாள் மீண்டும் பணிவிடை செய்தல். மரியாள் இயேசுவின் பாதங்களை அபிஷேகஞ்செய்தல் – யோவான் 12: 1 – 8***

### 1. மார்த்தாள் பணிவிடைசெய்தல் –

***லூக்கா 10:38 – 42: (திருவிவிலியம்) – அவர்கள் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். அப்போது இயேசு ஓர் ஊரை அடைந்தார். அங்கே பெண் ஒருவர் அவரைத் தம் வீட்டில் வரவேற்றார். அவர் பெயர் மார்த்தா. அவருக்கு மரியா என்னும் சகோதரி ஒருவர்***

***இருந்தார். மரியா ஆண்டவருடைய காலடி அருகில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். 40ஆனால் மார்த்தா பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாகி இயேசுவிடம் வந்து, “ஆண்டவரே, நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டு விட்டாளே, உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி புரிய அவளிடம் சொல்லும்” என்றார். 41ஆண்டவர் அவரைப் பார்த்து, “மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். 42ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள்; அது அவளிடமிருந்து எடுக்கப்படாது” என்றார்.***

***[Ken Gire அவர்களால் எழுதப்பட்ட ‘Moments with the Savior’ எனும் புஸ்தகத்திலிருந்து, மரியாள் மார்த்தாள் பற்றிய சிறு குறிப்பு இங்கு மேற்கோள் காட்டப்படுகின்றது.]***

### *Mary and Martha 1, Moments with the Savior by Ken Gire*

- *ஓர் இல்லத்தில் தலைசாய்த்து ஒய்வெடுப்பதென்பது இயேசுவுக்கு ஓர் அரிய உபசரிப்பாக இருந்தது. குறிப்பாக, கர்த்தராக அங்கீகரிக்கப்பட்டு, தம்மை நேசிக்கும் இது போன்ற ஓரில்லத்தில் என்றால் அது அரிதுதான். முதலில், மூத்த சகோதரியும் வீட்டின் உரிமையாளருமான மார்த்தாள்தான் அவரைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டவள். “மரியாளே! மரியாளே! சீக்கிரம் வா! இயேசு வந்திருக்கிறார்!” என்கிற அவளுடைய உற்சாகக்குரல் வீடு முழுவதும் எதிரொலித்தது. மரியாள் அவரை வாழ்த்த விரைந்து கதவருகே சென்றாள். உடனடியாக அவர்கள் அவருக்குப் பணிவிடை-புரிய துவங்கினார்கள். மார்த்தாள், அவர் பருக புத்துணர்ச்சியூட்டும்*



குடிநீரைக் கொண்டு வந்து தந்தாள். மார்த்தாள், பணிவிடை செய்ய மிகவும் ஆர்வமாக இருந்தாள். உற்சாக ஆற்றலுடன் இருந்தாள். தனது சட்டைக்கையை மடக்கிவிட்டு, உபசரிக்க முதல் ஆளாகவும், ஒவ்வொரு பாத்திரத்தையும் சுத்தஞ்செய்து வைக்கும் வரை, கடைசியில் வெளியேறும் ஆளாகவும் இருந்தாள். விரைவில் எழுந்திருப்பவளாகவும் இருந்தாள். அப்படியானால், மரியாள் எப்படிப்பட்டவள்? அவள் 30 நிமிடங்கள் கழித்து எழுபவள். அவளுக்குச் சமைக்கப் பிடிக்கும், ஆனால் ஒழுங்கமைத்து சுத்தம் செய்யவோ பிடிக்காது. விரைந்து புரிந்துகொள்கிற அறிவுக்கூர்மையுள்ளவள். சிலது என்றாலும் சிந்தனைக்குரிய கேள்விகளைக் கேட்பவள். பிறர் கூறுவதை உன்னிப்பாகக் கவனிப்பவள். கூருணர்வுடையவளும் அமைதியானவளும் ஆவாள். மரியாள் இயேசுவின் பாதரட்சையைக் கழற்றி அவரது களைத்துப்போன பாதங்களைக் கழுவுகையில், மார்த்தாள் சமையலறையில் சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டிருந்தாள். சீஷர்களைப் பற்றி அவர் பேசுவதை இருவரும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்கள். மரியாள் தனது கடமையை முடித்தவுடன், தண்ணீர் பாத்திரத்தையும், துடைத்த துணியையும் ஓர் ஓரத்தில் அப்படியாக வைத்தாள். அவள் அவருடைய பாதத்தண்டையிலே அமர்ந்தாள். வேதாகமத்தில் மரியாள் மூன்று தரம் வருவதைப் பார்க்கலாம், அம்மூன்று முறையும் மீட்பரின் பாதத்தண்டையில் தான் இருந்தாள். அவளது இந்தச் சரீர பாங்கானது அவளது இருதயத்தின் பாங்கையே, அதாவது, மனத்தாழ்மை, பயபக்தி, கற்றுக்கொள்ளக்கூடிய இருதய பாங்கினையே குறிக்கின்றது. இவ்வனைத்துமே ஒரு நல்ல சீஷனுக்குரிய / சீஷைக்குரிய குணலட்சணங்களாகும். அங்கே அவள் அமர்ந்து, அவரது உதடுகளிலிருந்து அதி இனிமையாக சொட்டிக்கொண்டிருந்த ஒவ்வொரு வார்த்தையையும் தனது செவி வழியே பருகிக்கொண்டிருந்தாள். ஆனால், உரையாடலுக்கும் தனது பற்பல தயாரிப்புகளுக்கும் இடையில் பிட்கப்பட்டவளாய் மார்த்தாளின் கவனம் சமையலறையின்பால் ஈர்க்கப்பட்டது. அங்கே அவள் விருந்துக்கு ஆயத்தம்பண்ணிக்கொண்டிருந்தாள்.

சோர்வடைந்தப் பயணிகளுக்குச் சூடான உணவு போன்று வேறெதுவும் சிறப்பாக இருக்காது. சிறந்ததைத் தவிர வேறொன்றையும் இயேசுவுக்குக் கொடுக்கவில்லை.

***ஜூலி** :- இயேசு மார்த்தாளின் இல்லத்திற்கு மூன்று தரம் சென்றிருக்கிறார்; இது இக்குடும்பத்திடம் அவர் சவுகரியத்தையும், அன்பையும், அவர்கள் அவரை மகிழ்ந்து ஏற்றுக்கொண்டதையும் உணர்ந்ததை நமக்குச் சொல்கிறது. ஏபி (A b b y ) அவர்களே, இக்காலக்கட்டத்தில் ஸ்திரீகளுக்கான கலாச்சார அமைப்பைப் (**cultural setting**) பற்றி கொஞ்சம் எங்களுக்குச் சொல்லுங்கள்.*

***ஏபி (A b b y )** :- கலாச்சார ரீதியாக, ஸ்திரீகள் அதிகமாக இல்லத்தைப் பராமரிக்கும் வேலைதனை எடுத்துக்கொள்ளவே எதிர்ப்பார்க்கப்பட்டார்கள். இக்காரணத்தினால் தான், இயேசு தன் இல்லத்திற்கு வந்தபோது, மார்த்தாள் போஜனத்தையும், வீட்டையும் ஆயத்தஞ்செய்வதில் அதிக கவனம் செலுத்தினாளென்று நான் எண்ணுகிறேன். இயேசுவினுடைய காலத்தில் ஸ்திரீகளுக்கான இயல்பான கடமைகள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டவையாக இருந்தன. ஸ்திரீகள் தங்களுடைய இல்லங்களில் சில சுதந்திரங்களைப் பெற்றிருந்தாலும், அரிதாகவே அதிகாரத்தினைப் பெற்றிந்தார்கள் மற்றும் ஆடவர்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டார்கள்.*

***ஜூலி** :- இயேசு ஜீவித்த காலமான கி.மு. 1 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ரபி எலியேசர் அவர்களிடமிருந்து தாங்கள் கண்டுபிடித்த மேற்கோளையும் எங்களுக்குச் சொல்லுங்கள்.*

***ஏபி (A b b y)** :- அது மிகக் கடுமையான ஒன்றாகும். அவர் "தோராவின் வார்த்தைகள் ஒரு ஸ்திரீயிடம் ஒப்படைக்கப்படுவதைக்காட்டிலும் அது எரிக்கப்பட வேண்டும்... எவர் தனது குமாரத்திக்குத் தோராவைக் கற்பிக்கிறாரோ அவர் அவளுக்கு ஆபாசத்தைக் கற்பிக்கிறவர் போன்றவர்" என்று கூறினார். யூத மதத்தின் சில பிரிவுகள்*

*முன்பு இப்படி இருந்ததைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன், ஆனால் ஸ்திரீகளுக்குத் தோரா கற்பிக்கப்படுவது குறித்தக் கடுமையான பார்வை உண்மையில் என்னை ஆச்சரியமடையச் செய்தது.*

***ஜூலி** :- நான் இஸ்ரயேலுக்குச் செல்வதற்கான சிலாக்கியம்பெற்றேன், அங்கு நாங்கள் ஒரு பாரம்பரியமான யூத ஜெப ஆலயத்திற்குச் சென்றிருந்தோம். இன்றுவரை, ஆராதனைகளின்போது ஸ்திரீகள் பிரிக்கப்பட்டே வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆடவர்கள் அவர்களைப் பார்ப்பது கூட இல்லை. முற்காலங்களிலெல்லாம் புருஷர்களின், ஸ்திரீகளின் செயற்பாடுகளனது (**roles**) மிகவும் தனித்தனியே வரையறுத்துக் குறிக்கப்பட்டிருந்தது. ஆக, இயேசு போதித்துக் கொண்டிருந்த இடத்தில் மரியாள் அமர்ந்திருந்தது ஒழுக்கக்கேடாக இருந்திருக்கும் என்று தாங்கள் எண்ணுகிறீர்களா?*

***ஏபி (Abby)** :- அது இழிவாகப் பார்க்கப்பட்டிருக்குமென்றே நான் எண்ணுகிறேன். இயேசுவும் ரபி என்று அழைக்கப்பட்டார், எனவே ஒரு ரபி ஒரு குழுவின் முன் போதித்துக்கொண்டிருக்கையில், அவருடைய பாதத்தண்டையிலே ஒரு ஸ்திரீ அமர்ந்திருந்தால், ஜனங்கள் நிச்சயம் அதைத் தட்டிக்கேட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். மரியாள் சில முக்கிய சமூகக் கட்டளை நியதிகளைச் (**social norms**) சோதனைக்குட்படுத்தியிருக்கிறாள்.*

*இயேசு, தமது காலத்திலிருந்த பெரும்பாலான ஜனங்களைப் போல, ஒருபோதும் எதிர்வினையாற்றவில்லை. பாவிகளையும், ஆயக்காரர்களையும், குஷ்டரோகிகளையும் மற்றும் இழிவாகப் பார்க்கப்பட்டவர்களையும் தன்னகத்தே சேர்த்துக்கொண்டார். ஒருவேளை, இதுவே மரியாள் இயேசுவை நம்ப ஊக்குவித்திருக்கக்கூடும். இயேசு அவர்கள் இல்லத்திற்கு மூன்று தரம் வந்திருப்பதால், இக்குடும்பத்துடன் ஒரு நெருக்கம் இருந்திருக்க வேண்டும். மரியாள் அவருடன் பழகுவதற்குச் சௌகரியமாக/தோதாக (**comfortable**) உணர்ந்துள்ளாள்.*

***ஏபி (Abby)*** *:- இயேசு தம்மைப் பின்பற்றும்படி, அனைத்துச் சாராரையும் அழைத்தார்; அவர் ஸ்திரீகளை விலக்கி வைக்கவில்லை. அவர் ஸ்திரீகளையோ குழந்தைகளையோ ஒருபோதும் புறக்கணிக்கவில்லை.*

***[Ken Gire அவர்களால் எழுதப்பட்ட 'Moments with the Savior' எனும் புஸ்தகத்திலிருந்து, மரியாள் மார்த்தாள் பற்றிய அடுத்த சிறு குறிப்பு இங்கு மேற்கோள் காட்டப்படுகின்றது]***

***Mary and Martha 2, Moments with the Savior by Ken Gire***

*அவள் மாவைப் பிசைந்துக்கொண்டிருந்தபோது, மற்ற என்னவெல்லாம் செய்யவேண்டி இருந்ததோ, அதைப்பற்றியெல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்தாள். இப்போது அவளால் அவர்கள் பேசும் வார்த்தைகளைக் கேட்க முடியவில்லை, குரல்களின் ஒலியை மாத்திரமே கேட்கமுடிந்தது. மேலும், அந்த ஒலி அவளுக்கு எதிராக எரிச்சலை ஏற்படுத்தியது.*



*அதினால், மரியாள் இங்கு வந்து தனக்கு உதவாமலிருக்கிறாளென்பதைத் தன்னால் நம்பக்கூட முடியவில்லை என நினைத்தாள். அப்படியே, மார்த்தாள் தன் கையைக் - கொண்டு மாவை ஓர் அழுத்து அழுத்தினாள். மரியாள் இங்கே இருக்க வேண்டுமே என நினைத்தாள். மற்றொரு தரம் கையைக்கொண்டு மாவை அழுத்தினாள். அவள் இங்கு இருந்தால் இவ்வேலையை இருவரும் சேர்ந்து பாதி நேரத்தில் செய்து முடிக்கலாமே என நினைத்தாள். அவள் முணுமுணுத்துக்கொண்டே மாவை இழுத்து பிசைந்து, இழுத்து பிசைந்துக்கொண்டிருந்தாள். அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்க அவளுக்கும்*

*வாஞ்சையிருந்தது, ஆனால் யாராவது இராப்போஜனத்தை ஆயத்தப்படுத்தியாக வேண்டுமே என நினைத்தாள். மார்த்தாள் சிறிது காய்ந்த மாவுத்தூளை எடுத்து மாவு உருண்டையின்மீது தூவினாள். அவர்கள் பேசுகையில் குறைந்தபட்சம் அவர்கள் இங்கு வரவாவது செய்யலாம் என நினைத்தாள். அவள் மாவை உப்பிக்கொள்ளும் பிசைந்த மாவாக்கிக்கொண்டிருந்தாள். அவர் மரியாளை அங்கேயே அமர விட்டுவிட்டதை தன்னால் நம்பவே முடியவில்லை என நினைத்தாள். இன்னொருதரம் கையைக்கொண்டு மாவை அழுத்தினாள். இங்கே தான் சமையலறையில், வியர்வை சிந்த, கடினமாக வேலைசெய்துகொண்டிருக்கிறேனே அவருக்குக் கவலையே இல்லையா? என்பவளாய், இறுதியாக, பொறுத்தது போதும் என்றானாள். மார்த்தாள் மாவைக் கீழே வைத்துவிட்டு அமர்வு அறைக்குள் (**living room**) கனத்த அடிகளுடன் நடந்து சென்றாள். அவரிடத்தில் வந்து: “ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவையில்லையா (அக்கறையில்லையா)? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும்!” (லூக்கா 10:40) என்றாள். மார்த்தாள் கோபமாக இருந்தாள். அவள் மரியாளிடம் நேரடியாகக் கூட சம்பாஷிக்கவில்லை. அவள் மிகவும் அதிருப்தியான கோபத்துடன் இருந்தாள். அவள் பெயரைக்கூட சொல்லவில்லை. அவள் மரியாளை “என் சகோதரி” என்றே குறிப்பிட்டாள். லூக்கா 10:41 – 42: (திருவிவிலியம்) ஆண்டவர் அவளைப் பார்த்து, “மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள்; அது அவளிடமிருந்து எடுக்கப்படாது” என்றார். அவரோ தமது கருத்தைக் கனிவாகவும் தெளிவாகவும் அவளுக்குப் புரிய வைத்தார்; அவருடன் ஐக்கியங்கொள்வதென்பது, முன்னுரிமைகள் (**priorities**) மற்றும் தேர்வு (**choice**) சார்ந்த ஒரு காரியமாகும். இது ஜீவன் அளிக்கக்கூடிய போஜனத்தின் சிறந்த பங்காகும். உண்மையில், இதுதான் பிரதான போஜனமாகும் (**main course**). அதற்காக மரியாள் என்ன*

*செய்தாள்? அவள் செய்ததெல்லாம் அவரண்டையில் அமர்ந்ததே. அவள் அமர்ந்த இடம்தான் காரியத்தை மேம்படுத்தியது.*

***ஜூலி*** *:- தங்களால் அங்கு நிழவின எரிச்சலை உணர முடியும். மார்த்தாள் தனிப்பட்ட முறையில் மரியாளிடம் செல்லாமல், நேரடியாக இயேசுவிடம் சென்றதென்பது சுவாரஸ்யமாக உள்ளது. இதைப் பற்றித் தங்களுக்கு ஏதேனும் விசித்திரமாக தோன்றுகின்றதா? ஆம், குடும்ப பிணக்கினைக் கையாள அவள் விருந்தினரிடமே சென்றுவிட்டாள்.*

***ஏபி (A b b y )*** *:- நானும் அதை ஒப்புக்கொள்கிறேன். இது அநேகமாக அந்த ஏற்புடையதல்லாத **(awkward)** தருணங்களில் ஒன்றாகும். இயேசுவும் எதிர்மறையாக எதிர்வினையாற்றவில்லை. அநேகமாக, மார்த்தாள் தன்னுடைய சகோதரியைத் திருத்தும்படி இயேசுவிடம் கேட்பதற்குப் பிரச்சனையில்லாது உணர்ந்தாள் போலும்.*

***ஜூலி*** *:- மரியாளை விசாரணைக்கு உட்படுத்திப் பார்க்கவும், சங்கடப்படுத்தவும் அவள் இயேசுவிடம் சென்றாளோ என நான் யோசித்துக்கொண்டிருந்தேன். அவள் மரியாளைப் பெயர் சொல்லிக்கூட அழைக்கவில்லை, மாறாக, “**என் சகோதரி**” என்றே கூறினாள். அநேகமாக, ‘போ, உன் சகோதரிக்கு உதவு’ என இயேசு மரியாளிடம் கூறுவார் என மார்த்தாள் எண்ணியிருந்திருப்பாள் போலும். மேலும், மரியாள் அங்கு எதுவுமே பேசவில்லை என்பதும் சுவாரஸ்யமாக இருப்பதாகக் காண்கிறேன். மரியாள் தனக்காதரவாக எதிர் பேசவில்லை; இயேசுவே அவளுக்காதரவாகப் பேசினார். மரியாள் தான் சரியானதைச் செய்வது நலமானதாக உணர்ந்ததால், அவள் தனக்காகப் பேசுவதற்கு இயேசுவை அனுமதித்தாள்.*

***ஏபி (Abby)*** *:- மார்த்தாள் தனது வீட்டிற்கு வந்திருந்த இந்த அனைவருக்கும் உணவளிக்க வேண்டி பரப்பரப்பாகச் செய்வதறியாது, கடைசித் தருவாயில் ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தாள். இயேசுவும், பன்னிரண்டு*

*சீஷர்களும் மற்றும் அநேகமாக அவர்களைப் பின்தொடர்ந்து வந்திருந்த ஒரு ஜனக்கூட்டமும் அங்கு குழுமியிருந்தார்கள். அக்காலத்தில் நாம் பெற்றிருக்கும் நவீன வசதிகளை அவள் பெற்றிருக்கவில்லை. நானாக இருந்திருந்தேனாகில், எனக்குத் தேவைப்படுகின்ற (அ) எனக்குத் தகுதியான உதவி என நான் நினைக்கும் உதவி எனக்குக் கிடைக்கவில்லை என நினைக்கும்போதே, நான் திணறிப்போய், என்னுடைய பொறுமையின் எல்லைக்கே சென்றிருப்பேன்.*

***ஜூலி*** *:- அவள் தன்னுடைய விரக்தியில் / எரிச்சலில் சற்றே நியாயப்படுத்தப்பட்டிருந்தாள்.*

**பெக்கா *(Becca)*** *:- 'நானோ இயேசுவிற்குப் பணிவிடை புரிவதற்காக வேலை செய்துகொண்டிருக்கிறேன் (இது நல்லதென்றும், நல்ல எண்ணத்துடன் தான் செய்கிறாளென்றும் நமக்குத் தெரியும்), என்னுடைய சகோதரியோ எனக்கு உதவாமல் இருக்கிறாள், அது மாத்திரமல்லாமல், இயேசுவும் எனக்கு உதவி புரியும்படி அவளிடம் கூறவுமில்லை' என்கிற கண்ணோட்டத்திலிருந்து மார்த்தாள் பேசுகிறாளென்பதை, சராசரி பாவமுள்ள மனிதர்களாக, நாம் மிக எளிதாகப் புரிந்துக்கொள்ள முடியுமென நான் நினைக்கிறேன். மற்றவர்களைப் பற்றி இந்த அனுமானங்களையும் தீர்ப்புகளையும் செய்வது மற்றும் அதினால் அவர்கள் மீது கோபப்படுவதென்பது சரியானதல்ல; மேலும், நமக்குளிருக்கும் இந்த எண்ணங்களையும் உணர்வுகளையும் பற்றி நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சாத்தானும் அவனுடைய தாக்கமும் **(influence)** எப்பொழுது வேண்டுமானாலும் உள்நுழையக்கூடும்; அது மிக நியாயமானதாகக்கூட தெரியுமென்பதால், அதனை நம்மால் அடையாளங்கண்டு கொள்ள முடியாமல் போகலாம்; எனவே நாம் எப்போதும் விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும்.*

***ஜூலி*** *:- இது அவளுக்கான ஒரு சோதனை, என்கிற அந்தத் தொடர்பை பெக்கா அவர்கள் ஏற்படுத்தினார். அவள்*

*தன்னுடைய சேவையைச் செய்துகொண்டிருந்தாள்; மேலும், அங்கே இயேசுவுக்கும் மற்றவர்களுக்கும் உணவளிப்பதென்பது நல்லது தானே. ஆனாலும், அவள் வேறு ஒருவர் என்ன செய்கிறார் என்பதைக் கவனிப்பதிலும் பார்ப்பதிலும் மும்முரமாக இருந்தாள். இன்றைய உலகில் நமக்கானப் பிரத்யேகப் பாடங்களைப் பற்றி நாம் பேசப்போகிறோம், ஆனால், இம்முதல் கதையிலிருந்து தாங்கள் எடுத்துச்செல்லும் முக்கிய முடிவான கருத்துக்கள் எவை என்பதைப் பற்றிக் கூறுங்களேன்.*

***ஏபி (Abby)*** *:- இயேசு இத்துனை மென்மையாகப் பதிலளித்துப் போதிப்பதை நான் விரும்புகிறேன். அவர் கிருபையுடனும் அன்புடனும் பதிலளித்தார் மற்றும் அவர் மார்த்தாளின் (அ) மரியாளின் திறனையும் நசுக்க விரும்பவில்லை. நமது விசுவாசமென்பது முழுக்க கிரியைப் பற்றியதாக மாத்திரம் மாறாமல் பார்த்துக்கொள்ளும்படி கவனமாக இருக்க வேண்டும் என்பதையும் நான் கற்றுக்கொண்டேன். கிரியை என்று நான் எதைச் சொல்கிறேன் என்றால், வார்த்தையும் தேவனும் நமக்கு என்ன சொல்ல விரும்புகிறார்களோ அதைக் கவனிக்கவும் உள்வாங்கவும் மறந்துவிட்டு, வெறுமனே பணிவிடை புரிய மாத்திரம் விரும்புதல் என்கிற அர்த்தத்தில் சொல்கிறேன்.*




***மரியாளும் மார்த்தாளும் இயேசுவை நேசிக்கவும், அவரை மதிக்கவும், அவருக்குப் பணிவிடைபுரிய ஆழமாக வாஞ்சிக்கவும் செய்தார்கள்.***

### *இயேசுவின்மீது அவளது முழுமையான பற்று இருந்தபோதிலும், மார்த்தாளுக்குத் திருத்தம் தேவைப்பட்டது. இதில் நமக்கான பாடமென்ன?*

*நாம் இருக்கும் இடத்திலிருந்து மார்த்தாளைப் பார்த்து, அவள் எப்படி ஒரு வாய்ப்பை இழந்துபோனாள் என்பதை உற்று*

*நோக்கவும், பின்னர் நாம் எப்படி அவ்வாறு செய்திருக்க மாட்டோம் என்று சிந்திப்பதும் சுலபமாக இருக்கும். ஆனால், உண்மையில் அப்படி நடந்திருப்போமா? மார்த்தாளைப் போல நாமும் சற்று நிதானித்து இங்கே கொடுக்கப்பட்டுள்ள பாடங்களைச் சிந்திக்க வேண்டும். இந்தப் பாடங்கள் மார்த்தாளை மாற்றவேசெய்தன என்றும், எனவே அவை நம்மையும் மாற்றுமென்றும் நான் நம்புகிறேன். ஒரு பாடத்தைக் கவனித்து அதை நமக்காக அப்பியாசப்படுத்தாத வரையிலும், அப்பாடத்தை நாம் கற்றுக்கொள்ள முடியாது.*

*மார்த்தாள் உண்மையிலேயே அழுத்தத்தில் இருந்தாள். அனைவரின் களைப்பாறுதலும் அவள் தோள்களின் மீதிருந்தது. ஒரு நியாயமான ஏமாற்றம் / விரக்தி அங்கிருந்தது. அந்த ஏமாற்றத்தைக் கொண்டு / விரக்தியைக் கொண்டு என்ன செய்யலாம் என்பதை இயேசு நமக்குப் போதிக்கிறார்.*

## ஆழமாக ஆத்துமாவை ஆராயும் நான்கு பாடங்கள்:

***ஆழமாக ஆத்துமாவை ஆராயும் முதலாம் பாடம்:***

**உங்கள் வாழ்க்கையை வேறொருவருடன் ஒப்பிடும்போது அதிருப்தி / திருப்தி அடையா நிலை ஏற்படுகிறது.**

**ஜூலி** *:- சமீபத்தில் நான் கலந்துகொண்ட வரலாற்றுச் சொற்பொழிவிலிருந்து பின்வரும் ஒரு சொற்றொடரை கேட்க நேர்ந்தது – “புகைப்படங்கள் பொய் சொல்லாது, ஆனால் புகைப்படக்காரர்கள் பொய்யர்களாக இருக்கலாம்.” (****Photos don’t lie but photographers can be liars****) காலத்தின் ஒரு நொடிப்பொழுதில் எடுக்கப்பட்ட நிழற்படமானது (****snapshot****) அதற்கு முன்னும் பின்னும் உடனுக்குடன் என்ன நடந்தது என்ற முழு கதையையும் சொல்லாது. மற்றவர்களின் வாழ்க்கையையும், அவர்களிடம் இருப்பதையும் இல்லாததையும் பார்க்கையில் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரிடமும் ஒரு கதை இருக்கிறது,*

*ஒவ்வொரு கதையிலும் தேவன் கிரியை செய்து வருகிறார். ஒப்பீடுகள் (**comparisons**) நம்மைத் தவறான பாதையில் இட்டுச்செல்லும்.*

*2 கொரிந்தியர் 9:8 –*

***மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.***

*எபிரெயர் 13:5 –*

***நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.***

***ஜூலி** :- “விருந்தோம்பல் என்பதில், எல்லாம் முழுநிறைவாய் உள்ளதா எனப் பார்த்துக்கொள்வதைக் காட்டிலும் அதிகமான காரியங்கள் இருக்கின்றன” (**There’s more to hospitality than everything looking perfect**) என ஏபி கூறினார். விருந்தோம்பல், ஐக்கியத்திற்கான தொனியை அமைக்க வேண்டும். புதிதாகச் செய்யப்பட்ட அப்பம் இருக்கின்றதா எனச் சரிபார்ப்பதைக்காட்டிலும் இங்கே ஐக்கியம்தான் மிக முக்கியமானதாக இருந்தது.*

***ஏபி (Abby)** :- தேவன் நமக்கு அருளியுள்ள ஆவிக்குரிய ஈவுகளை நாம் ஒப்பிட்டுப்பார்த்து, வேறொருவரின் ஈவு எனக்கிருந்தால் நலமாக இருக்குமென நாம் முறையிட்டுக்கொண்டிருந்தோமேயானால் (**complain**), பிறகு நாம் ஊழியஞ்செய்ய வேண்டியவர்களுக்கு, நம்மால் ஊழியஞ்செய்ய முடியாமல் போய்விடும்.*

***ஆழமாக ஆத்துமாவை ஆராயும் இரண்டாம் பாடம்:***

**மிக முக்கியமான காரியத்தையே முதலில் செய்யுங்கள் – முக்கியமான / நீடித்திருக்கிற காரியத்திலிருந்து அற்பமான காரியத்தைப் பிரித்துவிடுங்கள்.**

***ஜூலி*** *:- ஒருவேளை, இன்னும் இவ்வளவு நாட்கள் மாத்திரமே உயிரோடு இருக்கப்போகிறீர்கள் என்பது தங்களுக்குத் தெரியவந்து, உங்கள் குடும்பத்தார் உங்களைச் சுற்றி இருக்கையில், அமர்வு அறை (**living room**) அவ்வளவு சுத்தமாக இல்லையே (அ) அனைவருக்கும் போதுமான உருளைக்கிழங்கு இருக்குமா என்று அவர்கள் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார்களானால், நீங்கள் எப்படி நடந்துக்கொள்வீர்கள்? இன்னும் கொஞ்சக் காலத்தில் காரியங்கள் உண்மையிலேயே பரப்பரப்பாகும் (**c r a z y** ) என்பதை அறிந்தவளா(னா)ய், அவர்கள் முக்கியமான காரியங்களுக்கு மீண்டும் முக்கியத்துவமளிக்கவும் (**reprioritize**), அவர்களுக்காக நீங்கள் கூற விரும்பும் இறுதி வார்த்தைகளை அவர்கள் கேட்கவுமே நீங்கள் விரும்புவீர்கள், இல்லையா? “இப்போது நான் உங்களிடத்தில் இருக்கிறேன், இன்னும் கொஞ்சக்காலத்திலே நான் இருக்கப்போவதில்லை” என்கிற விதமாக இயேசு கூறினார்.*

*உங்கள் வாழ்க்கையில், அவசரமான காரியமானது, முக்கியமான காரியத்தின் இடத்தை எடுக்க விட்டுவிடாதீர்கள். ஓ, அவசரமான காரியம் உண்மையில் நம்முடைய கவனத்தைப் பெறவேண்டி போராடும், பிறாண்டும் மற்றும் கதறும். அது நம்முடைய நேரத்திற்காகக் கெஞ்சும் மற்றும் அதனை அமைதிப்படுத்துவதன் மூலம் நாம் சரியானதைச் செய்துவிட்டோம் என்று கூட நினைக்க வைக்கும். ஆனால், இதின் அனைத்திலுமுள்ள அவலம் (**tragedy**) என்னவென்றால்: நீங்களும் நானும் அவசரமான காரியத்தின் (ஓர் அன்றாட காரியத்தின்) தீயை அணைத்துக்கொண்டிருக்கையில், முக்கியமான காரியம் மீண்டும் ஒரு காத்திருக்கும் நிலைக்கே தள்ளிவிடப்படுகின்றது. மேலும், இதில் சுவாரஸ்யமென்னவெனில், முக்கியமான காரியம் கூச்சலிடவோ (அ) கவனம் வேண்டுமெனக் கோரவோ செய்யாது. அவசரமான காரியம் போலல்லாமல்,*

*முக்கியமான காரியம் அதன் முக்கியத்துவத்தை நாம் உணரும் வரையில், அது பொறுமையாகவும் அமைதியாகவும் காத்திருக்கும்.*

**– *Charles Hummel (Tyranny of the Urgent என்னும் தன்னுடைய புஸ்தகத்தில் இவ்வாறு கூறியுள்ளார்)***

இது அவசர மற்றும் முக்கியமானவற்றைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனை தோய்ந்த பத்தியாகும். பல திருமணங்கள் தோல்வியடைய இதுவும் ஒரு காரணமாகும். வாழ்க்கையின் அவசர காரியங்களானது நம்முடைய துணையைப் பற்றிய முக்கியமான காரியங்களைக் குறைத்துக் காண்பிக்கின்றன / நிழலடிப்புச்செய்துவிடுகின்றன.

***ஜூலி*** *:- திருமண அமைப்பில் நான் அதைப் பற்றி ஒருபோதும் சிந்தித்ததில்லை, ஆனால், நீங்கள் சொல்வது சரிதான். வரலாற்றில் எக்காலத்தைக் காட்டிலும், இன்றைய காலகட்டத்தில் நம்மைச் சுற்றி நிறைய கவனச்சிதறல்கள் உள்ளன –- அவ்வாறிருக்க இயேசு குறிப்பிட்ட நித்தியத்திற்குமான "நல்ல பங்கின்" மீது நாம் எவ்வாறு கவனம் செலுத்துவது?*

<u>ஜொனாதன் அவர்களின் (Jonathan) தனிப்பட்ட பதில்:-</u>

1. நாம் நம்மை ஆவிக்குரிய வகையில் நிரப்பிக்கொள்ள வேண்டும்; முதலில், நம்முடைய பரமபிதாவுடனான தனிப்பட்ட ஜெப ஜீவியத்திலிருந்து துவங்க வேண்டும்.

2. 'சபை கூடிவருதலை நாம் விட்டுவிடக் கூடாது' (எபி. 10:45) என்று அறிவுறுத்தப்படுகிறோம். இதன் பொருள் என்னவென்றால், நம்மால் முடிந்தவரை அடிக்கடி நம்முடைய வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும். எங்களுடைய வேதாகம ஆராய்ச்சி வகுப்பானது ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில் கூடுகிறது; ஒன்றை நான் தவறவிட்டாலும்கூட, அதற்காகக் கவலைக்கொள்வேன்.

3. நீங்கள் தனியாக இருந்து, வாழ்க்கைதுணையைத்

*தேடிக்கொண்டிருக்கிறீர்களானால், ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற வகையில், “கர்த்தருக்குள் மாத்திரமே” திருமணஞ்செய்து கொள்ளுங்கள்.*

4. *முடிந்தால், தங்களுடைய சில விடுமுறைக் காலங்களை வேதாகம மாநாடுகளுடன் இணைத்துக்கொள்ளுங்கள் (அ) ஆவிக்குரிய ரீதியில் கவனம் செலுத்த உதவுவதற்கு ஏதுவாக விடுமுறையின்போது, படிக்க வாசிப்புக் கட்டுரைகளைத் தயார் செய்து எடுத்துச்செல்லுங்கள்.*

***ஏபி (Abby)*** *:- தொழில்நுட்பமானது மிகவும் கவனத்தைச் சிதறடிப்பதாக இருக்க நேரிடுகின்றது. எனது தொலைபேசியை உபயோகிப்பதன் மூலம் நான் அடிக்கடி திசைத்திருப்பப்படுகிறேன், அதற்குப் பதிலாக, நான் என் கணவருடன் அதிகமாகக் கூட இருக்க முடியும். வேதாகமத்தை வாசித்து, “தேவன் இன்று என்னிடம் என்ன சொல்ல விரும்புகிறார்?” என்று சிந்திக்க காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்வது, நினைவில் வைக்க வேண்டிய ஒரு நல்ல வழியாகும்.*

**ஆழமாக ஆத்துமாவை ஆராயும் மூன்றாம் பாடம்:**

**தங்களுடைய மறைநோக்கியை *(periscope)* எப்போதும் உயர்த்திப் பிடித்திருங்கள்.**



***ஜூலி*** *:-* ***லூக்கா 10:39 – 41*** *– King James, American Standard மற்றும் Young's Literal மொழிபெயர்ப்பு உட்பட பல மொழிபெயர்ப்புகள் “****மரியாளும் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து****” **(Mary, who ALSO sat at Jesus' feet)** என்றே நிகழ்வினைத் துவக்குகின்றது. அது மார்த்தாளும் அங்கமர்ந்து கேட்டுக்*

*கொண்டிருந்தாள் என்பதைக் குறிக்கின்றது. ஆனால் **40** – வது வசனத்தில், இப்படியாக வருகின்றது, “மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில்* மிகவும் வருத்தமடைந்து / ***CUMBERED*** *(NASB –* இல் கவனத்தை ஒருமுகப்படுத்த முடியாதேபோய்/*distracted* *என்று உள்ளது) ...”.*

***KJV – மிகவும் வருத்தமடைந்து (Cumbered) / NASB – கவனத்தை ஒருமுகப்படுத்த முடியாதேபோய் (Distracted) –***

## *Strongs #4049 perispaō (பெரிஸ்பாவ்)*

***பொருள்:*** *எண்திசைக்கும் சுற்றிச் சுழலுதல் (**to drag all around**); அடையாளப்பூர்வமாக, கவலையினால் கவனத்தை ஒருமுகப்படுத்த முடியாதுபோதல் (**figuratively to distract with care**)*

***Thayer – இன் கிரேக்கு – ஆங்கில அகராதி (Lexicon):*** *இழுக்கப்படுதல், கவனச்சிதறல், அதிகமாக ஆக்கிரமிக்கப்படுதல், ஒரு காரியத்தில் ஓய்வில்லாமல் பணி செய்ய மிகவும் தீவிரமாக ஈடுபடுதல் (**too busy about a thing**)*

***கிரேக்கு:*** *Peri (பெரி) என்பதற்கு “சுற்றிலும்,” “எல்லாப் பக்கங்களிலும்”, “அருகில்” ஆகிய அர்த்தங்கள் உள்ளன; **Spao** (ஸ்பாவ்) என்பதற்கு “இழுக்கப்படுதல் / இழுத்தல் / எடுத்தல்” (ஒருவருடைய பட்டயத்தை உருவுதல் / எடுத்தல் போல) ஆகிய அர்த்தங்கள் உள்ளன.*

***ஜூலி*** *:- பட்டயத்தை வைத்துக்கொண்டிருக்கையில், தாங்கள் உண்மையில் தங்களுக்கு முன்னால் இருப்பதை மாத்திரமே பார்த்துக்கொண்டிருப்பீர்கள். வேதாகமத்தில், இவ்வார்த்தை, இங்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*இன்றைய நாளையே எடுத்துக்கொள்ளுங்களேன். நாம் அதிகமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளோம். நாம் ஒரு பரபரப்பான ... காலத்தில் இருக்கிறோம், நமது முன்னுரிமைகளைச் சரியாக வரிசைப்படுத்தி வைத்திருக்க வேண்டும். நாம் அழுத்தத்தின் / உளைச்சலின் (**stress**) மூலமாக*

*அமிழ்ந்து போகவும், அதிகமாக ஆக்கிரமிக்கப்பட்டும் மற்றும் ஆவிக்குரியதல்லாத காரியங்களில் மிகவும் ஈடுபட்டிருக்கவும் கூடாது.*

*Perispaō (பெரிஸ்பாவ்)* என்கிற பதத்திலிருந்து தான் ***periscope*** *(மறைநோக்கி)* என்கிற வார்த்தை உருவானது: 'மிகவும் பிரத்யேகமானதும் (***specific***), முக்கியமானதுமான (***important***) ஒன்றைக் கண்டுபிடிக்க' என்பது அதின் பொருளாகும். இயேசு மார்த்தாளிடம் மிக முக்கியமான காரியத்தில் கவனம் செலுத்தும்படிக்குக் கூறிக்கொண்டிருந்தார்.

***லூக்கா 10:41 –***

**இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் *கவலைப்பட்டுக் <3309> கலங்குகிறாய் <5182>.***

**கவலைப்படுதல் / *Worried:*** *Strongs #3309 merimnaō (மெரிம்னாவ்)*

***<u>பொருள்:</u>*** *ஒன்றைப் பற்றிக் கவலைப்படுதல்*

***<u>Thayer – இன் கிரேக்கு – ஆங்கில அகராதி:</u>*** *கவலைப்படுதல், கவலைகளினால் மனக்கலக்கமடைதல்*

**கலங்குதல் / *Bothered:*** *Strongs #5182 turbazō (டுர்பாட்ஸோ)*

***<u>பொருள்:</u>*** *"கலங்கச் / turbid" செய், அதாவது, சஞ்சலமடைதல், கலக்கமடைதல்*

***<u>Thayer – இன் கிரேக்கு – ஆங்கில அகராதி:</u>*** *சஞ்சலமடைதல், கலக்கமடைதல், மனக்கலக்கமடைதல், மன அமைதி குன்றிப் போகுதல்*

***ஜூலி*** *:- கலங்கலான (**turbid**) என்பதற்கு "தெளிவாகச் சிந்திக்க முடியாதிருத்தல் (அ), அர்த்தத்தில் (அ) விளைவில் தெளிவற்றிருத்தல்," மற்றும் "மந்தாரமான (**cloudy**), ஒளிபுகா (அ) மிதந்துக்கொண்டிருக்கும் பொருட்களுடன் அடர்த்தியாக இருக்கிற" ("கலங்கலான" நீர் என்பது அடர் அழுக்கான*

*மங்கலான நீராகும் / **murky water**) போன்ற அர்த்தங்கள் உள்ளன. மார்த்தாள் இருந்ததுப் போல, நாமும் நமதனைத்து கடமைகளில் சிக்கிக்கொண்டிருக்கின்றோம். நாம் தெளிவாகப் பார்க்க, கலங்கிய நீருக்கும் மேலாய் எழும்பி, அதிக கலக்கமில்லாமலும், கவலையில்லாமலும் இருக்கக் வேண்டும்.*

***மத்தேயு 6:34 –***

**ஆழமாக ஆத்துமாவை ஆராயும் நான்காம் பாடம்:**

**கர்த்தருக்காக நாம் ஏதேனும் காரியங்களைச் செய்யும் போது, நம்முடைய சுயநல எண்ணங்களால், மற்றவர்களிடமிருந்து உதவி கிடைக்கவில்லை என்று முறுமுறுத்தலின் (அ) முறையிடுவதன் மூலமாக, நாம் நம்முடைய ஆசீர்வாதத்தைத்தான் கடுமையாகக் கட்டுப்படுத்தி / வரம்புக்கு உட்படுத்தி விட நேரிடுகின்றது. நமது வேலைதான் மிகவும் கடினமானது என்பதாக உணருவது, உண்மையில் நமது சிலாக்கியத்திலிருந்து நம்முடைய கவனத்தைத் திசைதிருப்பிவிடும்.**

***“ ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.”***

***பிலிப்பியர் 4:6: (திருவிவிலியம்) –***

***“எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம்.”***

*ஏபி (**Abby**) :- கவலை தேவனுடைய குரலை மூழ்கடித்துவிடுகின்றது, மற்றும் வேதாகமத்தில் அவர் நமக்களித்துள்ள வாக்குத்தத்தங்களையும் மங்கலாக்கி-விடுகின்றது. பெருங்குழப்பத்தின் ஊடே மிகவும் முக்கியமான காரியத்தைப் பார்க்க நாம் முயல வேண்டும்.*

***1 பேதுரு 4:9 (திருவிவிலியம்) –***

***“முணுமுணுக்காமல் ஒருவருக்கொருவர் விருந்தோம்புங்கள்.”***

ஜொனத்தன் அவர்களே, தாங்கள் முறையிடாமல் விருந்தோம்பிக்கொண்டிருக்கின்ற மிகவும் கடினமானதும், தனித்துவமானதுமான ஒரு சூழ்நிலையில் இருக்கிறீர்கள் அல்லவா?! தங்களுடைய தாய்தந்தையர், தங்களுடனும் தங்கள் மனைவியுடனும் இப்போது வாழ்ந்து வருகிறார்கள். அதிலிருக்கும் சவால்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் சிலவற்றை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்களேன்.

> ***ஜொனாதன் அவர்களின் அனுபவம்:*** *என்னுடைய பெற்றோர் இருவருக்கும் 89 வயதாகுகின்றது, என் தந்தைக்கு மிதமான – தீவிர அல்சீமர் நோய் (மூளை சார்ந்த நினைவாற்றல் இழப்பு நோய்) உள்ளது. அவர்கள் வசித்துவந்த இடத்தில் என்னுடைய அம்மாவிற்கு கொஞ்சம் மன அழுத்தம் இருந்தது; ஆகவே, அவர்களுக்கு உதவி தேவைப்பட்டது. நாங்களே முன்வந்து, “எங்களுடன் வாழ வாருங்கள், எங்களால் முடிந்தமட்டும் நாங்கள் உங்களைக் கவனித்துக்கொள்வோம்” என்று கூறினோம். ரிக் அவர்களே, முறையிடவில்லை என்றால் தாங்கள் பூரணமானவர் என்று அர்த்தமாகிறது, இல்லையா? ஜூவலும் (**Jewel**) நானும், முறையிடவே மாட்டோமென்று சொல்ல முடியாது, ஆனால் அதனைச் சீர்செய்ய முயற்சி செய்து வருகிறோம். வெளிப்படையாகவே, மற்றவர்களுக்கு உதவுவதும், நம்மைக்காட்டிலும் மற்றவர்கள் மீது கவனம் செலுத்துவதும் பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை நமக்காகக் கர்த்தர் வைத்துள்ளார். வரவும் போகவும் எங்களுக்குச் சுதந்திரமில்லாமல் இருக்கலாம், ஆனால், நாங்கள் செய்யவேண்டியதைச் செய்கிறோம் மற்றும் இச்சிலாக்கியத்திற்காக நன்றியும் கூறுகிறோம்.*

“இது என்னுடைய குறைபாடற்ற சிறந்த வழியாக இராவிட்டாலும்கூட, இதுவே தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கான என்னுடைய வழியாம்” என்கிற தெளிவான மனப்பான்மையுடன் ஊழியஞ்செய்யுங்கள்.




***சரியான கண்ணோட்டத்திற்கான (perspective) மார்த்தாளின் தேவையானது, சரியான கண்ணோட்டத்திற்கான நமது சொந்தத் தேவைக்கே நுண்ணறிவையும் மதிப்பையும் தருகிறது. மார்த்தாளுக்கு வழியைக் காண்பித்த இயேசு நமக்கும் காண்பிப்பார்.***

***மார்த்தாளினுடைய இடைவிடாது கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் (preoccupation) சவால்களிலிருந்து கிடைத்த அப்பாடங்களனைத்தும் அவளுடைய நம்பிக்கையை அதிகரிக்கச் செய்ததா (அ) அவளை ஊக்கமிழக்கச் செய்ததா?***

*சில சமயங்களில், இயேசுவோடு சமகாலத்தில் வாழ்ந்தவர்கள், நம்மைப் போலவே அதே வலிமையற்ற நிலைகளையும் (**vulnerabilities**), சவால்களையும் பெற்றிருந்தார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்ப்பதில்லை. எப்போதுமே நாம் பேதுரு அடிகளாருக்கு விதிவிலக்குகளை வழங்குகிறோம், ஆனால், மார்த்தாளுக்கு நாம் அவ்வாறு வழங்குகிறோமா? அவளுக்கு இயேசு மொழிந்திட்ட திருத்தத்திற்கான வார்த்தைகளைக் கேட்கக் கடினமாக இருந்திருக்க வேண்டும். அவள் எவ்வாறு உண்மையுள்ளதன்மைக்கு உதாரணமாக உயர்ந்தாள் என்பதைப் பற்றிப் பார்ப்போம் வாருங்கள்.*

## உ. லாசருவை உயிர்த்தெழுப்புதல் –

*பிற்பாடு தேவனுடைய மகிமை எளிதில் உணர்ந்துக்கொள்ளப்படுவதற்கு ஏதுவாக, முதலில் உலகத்தின் பாவமும் வியாதியும் அதன் போக்கை எடுக்க இயேசு அனுமதிக்கச் செய்வதாகக் காண்கிறோம்:*

***யோவான் 11:1, 3 – 6 –***

***“…பெத்தானியா கிராமத்திலுள்ளவனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப்பட்டிருந்தான் … அப்பொழுது அவனுடைய***

***சகோதரிகள்: ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள். இயேசு அதைக் கேட்டபொழுது: இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார். இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார். அவன் வியாதியாயிருக் கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்.”***

> ***ஜூலி*** *:- இது விவேகத்திற்கு எதிரிடையாகத் தோன்றலாம். இங்கே அவர் அவர்களிடத்தில் அன்பாயிருந்தார் என்று கூறுகிறார், ஆனாலும் அவர் வேண்டுமென்றே விலகி இருந்தாரே; நாம் அதைப் பற்றிச் சற்று நேரத்தில் பேசவுள்ளோம். என்னைக் கவர்ந்த விஷயம், 5 – ஆம் வசனத்திலுள்ளது:* ***இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்.*** *கர்த்தர் யாரிடத்தில் அன்பாயிருந்தார் என்பதைப் பற்றிக் குறிப்பிடுகையில், முதலாவதாக அங்கிருந்த மனிதனான லாசரு வராமல் – மாறாக மார்த்தாளே முதலில் வருகிறாள்! புதிய ஏற்பாடு முழுவதிலும், ஒரு குறிப்பிட்ட பெயர்கொண்ட ஒருவரை இயேசு அன்புகூர்ந்தார் என்று சொல்லும் ஒரே இடம் இதுதான். இயேசுவுக்கு அன்பாயிருந்த ஒரு சீஷர் இருக்கிறார்... ஆனால், ஒருபோதும் அச்சீஷனுடைய பெயர் பதிவிடப்படவில்லை. இயேசு மார்த்தாளிடத்தில் அன்பாயிருந்தார். இது ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா? மரியாள் அவளுடைய சகோதரி என்பதாக மாத்திரமே குறிப்பிடப்பட்டிருக்கிறது.*

*இக்குடும்பத்துடனான இயேசுவின் உணர்ச்சி ரீதியான தொடர்பானது தெளிவாக வெளிப்பட்டிருந்தது, ஆனாலும் தேவனுடைய மகிமைக்காகச் சற்று விலகி இருந்தார்:*

**யோவான் 11:7, 11, 12, 14 – 15 –**

[7] ***அதன்பின்பு அவர் தம்முடைய சீஷரை நோக்கி: நாம்***

***மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் ...***
[11] ***அதன்பின்பு அவர் தம்முடைய சீஷரை நோக்கி: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்றார்.*** [12] ***அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்டவரே, நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள் ...*** [14] ***அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லி;*** [15] ***நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள்நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார்.***

*அவர்கள் நினைத்ததைக்காட்டிலும் தேவனுடைய மகிமை மகா பெரிதாக இருப்பதால், இயேசு வேண்டுமென்றே லாசரு மரணமடைய அனுமதித்தார்.*

*லாசருவின் மறைவுக்காகப் பரவலாகத் துக்கங்கொண்டாடினார்கள். மார்த்தாளுக்கும் மரியாளுக்கும் இடையிலான வேறுபாடுகளை மீண்டும் இங்கே நாம் கவனிக்கலாம் – இயேசுவிடம் கூறப்பட்ட மார்த்தாளின் துவக்க வார்த்தைகளைக் கவனியுங்கள்:*

### *யோவான் 11:17, 19 – 21 –*

***“ இயேசு வந்தபோது அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலுநாளாயிற்றென்று கண்டார்... யூதரில் அநேகர் மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோதரனைக் குறித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி அவர்களிடத்தில் வந்திருந்தார்கள். இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது, அவருக்கு எதிர்கொண்டுபோனாள்; மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள். மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து: ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்.”***

> ***ஜூலி*** *:- எல்லோரும் எங்கே இருக்கிறார்களென்பதை மீண்டும் பார்க்கலாம். நான் மார்த்தாளை இரண்டு சகோதரிகளில் வலிமையானவளாகவும், மேலும் அதிக வேலைகளைக் கையாளக்கூடியவளாகவும் கருதுகிறேன். இயேசு வருவதை அவர்கள் இருவரும் தெளிவாகக்*

*கேட்கிறார்கள், ஆனால் மார்த்தாளால் எழுந்து, வெளியே சென்று அவரைச் சந்தித்து அவருடன் பேச முடிகிறது. அக்ஷணத்தில் தன்னால் நகரவோ (அ) எல்லோருக்கும் முன்பாக எழுந்து செல்லவோ முடியாதெனத் தோன்றுமளவிற்கு, மரியாள் தனது துயரத்தால் மிகவும் ஆட்கொள்ளப்பட்டிருந்தாள். இவ்வனுபவம் மிகவும் புதியது. அவருக்கு வல்லமையிருந்தபோதும், அதை வைத்து அவர் ஒன்றும் செய்யவில்லை என்று அவர்கள் அறிந்தவேளையில், அவ்விரண்டு சகோதரிகளின் அந்நிலைமைகளைப் பற்றி, ஏபியும் நானும் பேசிக்கொண்டிருந்தோம், மற்றும் அவர்களுடைய இடத்தில் எங்களை வைத்துப்பார்க்கவும் முயற்சித்தோம்.*

*ஏபி அவர்களே, தாங்கள் எவ்வாறு உணர்ந்திருப்பீர்கள்?*

***ஏபி (A b b y)*** *:- நானும் என் சகோதரனும் மிகவும் நெருக்கமானவர்கள், ஆக நான் மிகவும் நிலைகுலைந்துபோயிருப்பேன். பின்னர் மார்த்தாள் பதிலளித்த விதத்தில் நானும் பதிலளித்திருப்பேனா என்றால், நிச்சயமாக என்னால் முடியாதென்று தான் நினைக்கிறேன். "சகோதரனைக் காப்பாற்ற நீங்கள் சரியான நேரத்தில் இங்கு வந்திருக்கலாமே – ஏன் வரவில்லை?" என்பது போல நான் கோபமாக இருந்திருப்பேன். அவளுடைய பதில் முற்றிலும் தொடர்புபடுத்தக்கூடிய ஒன்றாகவே உள்ளது.*

***ஜூலி*** *:- அவர் வேறுபட்ட கால அளவுகளில், மரித்துபோன மற்ற ஜனங்களை உயிரோடு எழுப்பியிருக்கிறார், உயிர்ப்பித்திருக்கிறார், ஆனால், மரித்து நான்கு நாட்கள் ஆனவர்களை அதுவரை எழுப்பியதில்லை. "லாசரு மரித்துப் பத்து நிமிடங்களே ஆகியிருந்தால், அவரால் அதைச் செய்திருக்க முடியும்," ஆனால், நாலுநாளாயிற்று, சரீரம் ஏற்கனவே அழுக ஆரம்பித்திருக்குமென அவர்கள் நினைத்திருக்கலாம். இத்தருணத்தில், அவர்கள் எந்த நம்பிக்கையும் அற்றவர்களாய் இருந்தார்கள். எதுவும் செய்ய முடியாத சூழல். லாசரு மரித்துபோனான், இயேசு இருந்திருந்தால் அதைத் தடுத்திருக்க முடியும்.*

இயேசுவினுடைய மேசியாத்துவ மகிமையை உண்மையாக ஏற்றுக்கொள்ளும் மார்த்தாளின் ஆழமான மற்றும் உள்ளார்ந்த விசுவாசத்தை இப்போது கவனியுங்கள்:

***யோவான் 11:22 – 27 –***

***" இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக் கொள்ளுவதெதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார். அதற்கு அவள்: ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள்."***



***ஏபி (Abby)*** *:- இந்தப் பதில் என்னைச் சிந்திக்க வைத்தது, ஏனென்றால் அவள் தீர்க்கதரிசனங்களில் நம்பிக்கை வைத்திருந்தாள் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.* ***எபிரேயர் 11:19*** *– ஆம் வசனமானது ஆபிரகாம் உயிர்த்தெழுதலை நம்பினதைப் பற்றி பேசுகிறது. அவளும் உயிர்த்தெழுதலை நம்பியிருந்தாள். சமீபத்தில் எனக்கு ஏற்பட்ட கருச்சிதைவு அனுபவத்தை நானும் என் கணவரும் அனுபவிக்கும் வரையில், இந்த உயிர்த்தெழுதல் உண்மையில் அவ்வளவு உண்மையாக எனக்குத் தோன்றவில்லை. எங்கள் துயரம் கடினமானயிருந்தது மற்றும் இன்னும் அதிலிருந்து நாங்கள் முழுமையாக மீளவில்லை.*

*நாங்கள் அதை விரைவாகக் கடக்க விரும்பினோம், ஆனால் அது ஆரோக்கியமானதுமல்ல, சாத்தியமுமில்லை. எனவே, தன்னுடைய அன்புக்குரிய சகோதரன் உயிர்த்தெழுப்பப்படுவான் என்று மார்த்தாள் நம்பின இந்நிகழ்வால் நான் உண்மையில் தொடப்பட்டேன்; அது அவளுக்கு மெய்யெனத் தோன்றியது, மற்றும் இயேசுவால் அதனைச் செய்ய முடியுமென்றும் அவளுக்குத் தெரிந்திருந்தது. இந்தக் கடினமான இழப்பை நான் அனுபவிக்கும் வரையில், எங்களது குழந்தை உயிர்த்தெழுப்பப்படுவதில் நான் உற்சாகமாக இருப்பதை என்னால் உண்மையில் தொடர்புபடுத்த முடியவில்லை. இராஜ்யம் இப்போது எனக்கு மிகவும் மெய்யானதாய் / உண்மையானதாய் இருக்கின்றது.*

*மார்த்தாளின் விசுவாசம் வெளிப்பட இயேசு ஏதுவுண்டாக்கினார். அவர் அதை மெதுவாகத் தூண்டிவிட்டார், அவள் அதற்கு ஏற்றாற்போல் பதிலளித்தாள். இதன் விளைவாக, அவரால் தம்மைப் பற்றியும், தேவனுடைய மகிமையைப் பற்றியும் மாபெரும் சத்தியத்தை வெளிப்படுத்த முடிந்தது. அவள் ஈடுபாடுடன் அவருடன் கூட இருந்தாள். இதுவே மார்த்தாளுடைய வீரத்தின் / நெஞ்சுரத்தின் (**heroism**) ஒரு பகுதியாகும்.*

***யோவான் 11:28 –***

***" இவைகளைச் சொன்னபின்பு, அவள் போய், தன் சகோதரியாகிய மரியாளை ரகசியமாய் அழைத்து: போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள்."***

*மார்த்தாள் புத்துணர்ச்சி பெற்றாள். அவள் இயேசுவிடம் பேசினாள், அவர் அவளுக்கு நம்பிக்கை கொடுத்தார். இங்கு, "ஓ, இப்போது நான் அவனை எழுப்பப்போகிறேன். கொஞ்ச நேரத்தில் நீங்கள் சந்தோஷமடைவீர்கள்" என்றவர் கூறாததைக் கவனியுங்கள். அவர் இதைப் பற்றி எவ்வித குறிப்பும் (**hint**) கொடுக்கவில்லை. அவர் அவளுடைய விசுவாசத்தை அதுவாகவே வெளிவர அனுமதித்தார். அவளுடைய சகோதரியைக் கூட்டிக்கொண்டு வருவதே அவளுடைய அடுத்த உள்ளுணர்வாக இருந்தது.*

## இப்போது நாம் மரியாளின் மன வேதனையைப் பற்றிப் பார்க்கப் போகிறோம்:

**யோவான் *11:29, 32 – 35 –***

***“ அவள் அதைக் கேட்டவுடனே, சீக்கிரமாய் எழுந்தாள் … இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள். அவள் அழுகிறதையும் அவளோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து: அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள். இயேசு கண்ணீர் விட்டார்.”***



*ஜூலி :- சுவாரஸ்யமான வகையில், மரியாள் வீட்டை விட்டு வெளியே வந்தபோது: அவர் பாதத்தில் விழுந்து:* ***ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்*** *என அவளும் மார்த்தாள் கூறினதையே கூறினாள். ஆனால், அவள் விசுவாசத்தை உறுதிப்படுத்தியதாகவோ (அ) மார்த்தாளைப் போல, இயேசுவிடம் இருந்து ஏதாவது வெளிப்பாட்டை பெற்றதாகவோ பதிவில்லை. மீண்டும், மார்த்தாள் அநேகமாக இருவரில் அதிக வலிமையானவளும், குறைவாக உணர்ச்சிவசப் படுகிறவளாகவும் இருந்திருக்கலாம். தகவலைத் தருகின்றவரும், அவளுடைய விசுவாசத்தை வெளிக்கொணர செய்து, அதன் மீது கட்டப்பட, அன்போடு ஆனால் உறுதியாக அவளுக்கு உறுதியளிப்பவருமான, “வலுவான” இயேசு அவளுக்குத் தேவைப்பட்டார். லாசருவை அவள் கடைசியாகப் பார்க்கும் தருணம் இதுவல்ல என்கிற சமாதானம் அவளுக்கு இப்படியாகத்தான் கிடைத்திருக்கும். மரியாளுக்குப் பரிவிரக்கமான, பரிதபிக்கின்ற, அவளுடன்*

*உட்கார்ந்து அழுவதும், அவளுடன் கூட கடினமான அனுபவத்தை தானும் உணருகின்ற ஒருவர் அவளுக்குத் தேவைப்பட்டார். இயேசு, "மரியாளே, அழுவதை நிறுத்து – பரவாயில்லை – நான் அவனை எழுப்பப்போகிறேனே" என்று சொல்லியிருக்கலாம். ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை. அவள் துக்கப்படவும், அவர்கள் அனைவருக்காகவும் அந்தத் துக்கத்தை தானும் உணரவும் அவர் அனுமதித்தார். ஏபி அவர்கள் கூறினது போல, இது ஒருவர் விரைவாகக் கடந்துபோகக்கூடிய அனுபவமல்ல. நாம் அதன் ஊடே கடந்து செல்ல வேண்டும். ஒவ்வொரு தலைமுறையிலும், ஒவ்வொரு இறுதிச் சடங்கிலும், மீண்டும் மீண்டும் நிகழும், இம்மனித சூழ்நிலையை இயேசுவானவர் அதின் ஊடாக கடந்து சென்றார். நாம் உணர்ந்ததை இயேசுவும் உணர்ந்தார். இது ஒரு நல்ல பாடமாகும். நாம் மற்றவர்களை ஆறுதல்படுத்த முற்படுகையில், அவர்களுக்கு உதவ வேண்டும் எனும் காரியமானது ஒரே அளவில் எல்லோருக்கும் பொருந்திவரும் என்று கூற முடியாது.*

***ஏபி (Abby)** :- "**What a Friend We Have in Jesus**" என்ற பாடலை நீங்கள் எப்போதாவது கேட்டிருக்கும்பட்சத்தில், நாம் நம்முடைய கஷ்ட காலங்களின், போராட்டங்களின் ஊடாகக் கடந்துசெல்லுகையில், அவர் நம்முடன் கூட அழுகிறார் என்பதை நாம் நினைவிற்குக் கொண்டுவர வேண்டும். நாம் உணரும் எந்த உணர்ச்சிகளிலிருந்தும் உடனே நாம் வெளிவர வேண்டுமென அவர் எதிர்பார்ப்பதில்லை. அவர் மார்த்தாளுக்குப் பொருத்தமான விதத்தில் அவளுக்குப் பதிலளித்தார். அவர் அவள் (மனதளவில்) இருக்குமிடத்தில் அவளைச் சந்தித்தார், கூடவே, அந்தப் பரஸ்பர துக்கமும் துயரமும் பகிர்ந்துக்கொள்ளுதலும் தேவைப்பட்ட மரியாளையும் அவர் சந்தித்தார்.*

*இருவர் பெற்றிருந்த மனநிலையில் எந்தத் தவறுமில்லை, மாறாக அவர்கள் வித்தியாசமாக இருந்தார்கள். இயேசுவால் வித்தியாசத்தைக் காண முடிந்தது மற்றும் தேவைக்கேற்ப ஒவ்வொருவரிலும் அவ்வித்தியாசத்தை நிரப்பவும் முடிந்தது.*

*வேதாகமத்தின் மிகச்சிறிய வசனம்:* ***யோவான் 11:35*** *– இல் உள்ள '**இயேசு கண்ணீர் விட்டார்**' என்பதாகும். இது தம்மைச் சுற்றியுள்ளவர்களின் துயரத்தில் அவரும் பங்குகொண்டார் என்பதைச் சுருக்கமாக உள்ளடக்கியிருக்கிறது. அவர் அவர்களுடன் சேர்ந்து, அந்தத் துக்கத்தைத் தம்முடையதைப் போலாக்கிக் கொண்டார். இது அவர் மரியாளை வெளிவர வைத்து அவளுக்கு ஆறுதலளித்ததின் ஒரு பகுதியாகும். அவளுக்கோ, வார்த்தைகள் ஆறுதலாக இருந்திருக்காது. அவளுடன் சேர்ந்து அழுவதே ஆறுதலாக இருந்தது.*

*இதற்குப் பிறகு, அவர்களின் சகோதரனை எழுப்பும் காட்சி நிகழ்ந்தது, இது அவர்கள் எதிர்பார்ப்பைத் தாண்டிய அதிகமான ஒரு காரியமாகும்.*




***மரியாளுக்கும் மார்த்தாளுக்கும், தங்கள் சகோதரனை ஜீவனுக்கு எழுப்புவதற்கு முன்பு, இயேசுவிடமிருந்து அவர்களுக்குத் தேவையானது கொடுக்கப்பட்டது. அவர்களின் அனுபவமானது இயேசு நம்மை அறிந்திருக்கிறார் என்பதைக் காட்டுகின்றது.***

***மார்த்தாள் அற்புதமான விசுவாசத்தையும் வளர்ச்சியையும் காட்டியிருந்தார். மரியாளின் அனுபவமும் இதே முடிவுகளைத் தந்ததா?***

*இச்சகோதரிகள் நமக்கு எவ்வளவு முக்கியமானவர்களென்பது இப்போது நமக்குத் தெளிவாகிறது. நாம் ஒவ்வொருவரும் இயேசுவோடு தொடர்புபடுத்தும் பல்வேறு வழிகளையும், நமக்குத் தேவையானபடி இயேசு நம்மோடு தொடர்புபடுத்தும் அவரது வல்லமையின் பல்வேறு வழிகளையும் அவர்கள் வரையறுக்கின்றார்கள். இயேசுவைப் பின்தொடர்வதென்பது ஏதோ எல்லோருக்கும் ஒரே விதமாக இருக்கும் ஓட்டமல்ல, மாறாக, அது நாம் மற்றவர்களுடன் கூட கடந்துசெல்லும் தனிப்பட்ட பாதையாகும்.*

## 3. மார்த்தாள் மீண்டும் பணிவிடை செய்தல். மரியாள் இயேசுவின் பாதங்களை அபிஷேகஞ்செய்தல் –

*இந்நிகழ்வு இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் முடிவில் நிகழ்ந்தது. அவர் மூன்றரை வருடங்களுக்கு முன்பு ஒரு கலியாண விருந்தில், தாம் எடுத்துச் செல்லப்போகிற சுவிசேஷத்தின் சந்தோஷத்தை அடையாளப்படுத்தும் வண்ணமாக, தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றி தமது ஊழியத்தைத் துவங்கினார். அவர் அவ்வூழியத்தைத் தம்மை மரணத்திற்கு ஆயத்தப்படுத்தும் ஓர் உருக்கமான அபிஷேகத்தால் முடிவுறச்செய்தார்; அவரே சுவிசேஷத்தின் சந்தோஷத்தை முழுமையாக அளிக்கத் தேவையான பலியாவார்.*

*அவருடைய ஊழியத்தின் துவக்கத்திலும் முடிவிலும் ஸ்திரீகள் இருந்தார்கள். அவரது முதலாம் அற்புதம் அவரது தாயால் தூண்டப்பட்டது. இக்கடைசி நிகழ்வோ மார்த்தாளாலும் மரியாளாலும் தூண்டப்பட்டது.*

*இவ்விரு சகோதரிகளும் தங்கள் ஆவிக்குரிய முதிர்ச்சியில் எவ்வாறு வளர்ந்தார்கள் என்பதையும், இம்முறை சகல கவனமுள்ளவர்களாயும், தங்களது சிந்தைகளில் ஐக்கியத்தை முன்னிலைப்படுத்தினவர்களாயும், தாங்கள் செய்யும்படிக்குத் தங்களுக்கென அருளப்பட்டவைகளில் ஒவ்வொருவளும் எவ்வாறு தொடர்ந்தார்கள் என்பதையும் கவனிக்கலாம் வாருங்கள்.*

### *மார்த்தாள் மனத்தாழ்மையுடன் சரீர தேவைகளைப் பூர்த்திசெய்ய பணிவிடை செய்தாள்:*

***யோவான் 12:1 – 8:***

***“ பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்குமுன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான்.”***

ஒவ்வொருவரும் தங்களின் உண்மையான குணத்தை வெளிக்காட்டும்படிக்கு வளர்ந்திருந்தார்கள். தாங்கள் யார் என்பதில் அவர்கள் இப்போது ஸ்திரமாயிருந்தார்கள். மார்த்தாள் பணிவிடை செய்துகொண்டிருந்தாள், ஆனால், இம்முறை கிருபையுடனும், மனத்தாழ்மையுடனும் மற்றும் மகிழ்ச்சியுடனும் அதனைச் செய்துகொண்டிருந்தாள். அவள் இனி ஒருபோதும் மனக்கலக்கமடைந்து கவலையுற்றிருக்கவில்லை. அவளது பணிவிடையானது, மரியாளுக்கு அபிஷேகஞ்செய்ய தேவையான நேரம் அமைவதற்கு ஏதுவான வாய்ப்பை ஏற்படுத்தி தந்தது. லாசருவும் அங்கு ஐக்கியங்கொண்டிருந்தான்.

*__ஜூலி__ :- மார்த்தாளினால், மரியாளுக்கு இச்செயலைச் செய்ய இடங்கிடைத்தது. இங்குதான் இச்சகோதரிகளினுடைய உறவின் அழகானது தெரிகின்றது. அவர்கள் இருவரும் சூரிய சந்திரர் போல எதிர்மாறானவர்களாய் இருந்தாலும், தங்களுக்கு அருளப்பட்டுள்ளதிலிருந்து அவர்கள் இருவரும் ஒருமிக்க இயேசுவிற்கு ஊழியஞ்செய்தார்கள். மார்த்தாளின் ஊழியமானது இயேசுவைப் போஷிப்பதாக இருந்தது (**nourish**). அவருக்கு இது தேவைப்பட்டிருக்கும், ஏனென்றால் வரப்போகின்ற காரியங்கள் கடினமாக இருந்தன. ஊழியஞ்செய்வது அவளுடைய ஈவாக (**g i f t**) இருந்தது. மரியாளுக்கு தன்னுடைய ஊழியத்தைச் செய்ய இடங்கிடைக்கச் செய்தபடியால், இக்காரியத்தில் மார்த்தாள் பாராட்டுக்குரியவளாகிறாள் (**hero**).*

*__<u>ரிக் (Rick) அவர்களின் அனுபவம்</u>__ : (முன்பு ஒரு வானொலி நிகழ்ச்சியாக இருந்த) இந்த வலையொலியை (podcast) 20 ஆண்டுகளுக்கும் மேலாக நிகழ்த்தி வருவதற்கான பாக்கியம் எங்களுக்குக் கிட்டியிருக்கிறது. ஒவ்வொரு வாரமும், நாங்கள் சுவிசேஷத்தைப் பற்றிப் பேசவும், யாரெல்லாம் கேட்கிறார்களோ அவர்களுக்கு நற்செய்தியைக் கொண்டுசெல்லவும் எங்களால் முடிகின்றது. இது எப்படிச் சாத்தியமாகிறது? என்னைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு வாரமும், வலையொலியை நிகழ்த்த தேவையான அனைத்தையும் ஒழுங்குபடுத்த அதிக வேலைகள் செய்ய*

*வேண்டியிருக்கிறது. இது ஒரு பெரிய சவாலாகும், மற்றும், என்னுடைய துணைவியாரான **Tricia** அவர்களின் உதவியில்லாமல் என்னால் இதைச் செய்ய முடியாது. ஒலிபெருக்கியில் (**microphone**) ஒலிக்கும் குரல் அவருடையதாக இராமல் போனாலும், ஒலிபெருக்கியில் ஒலித்துக்கொண்டிருக்கும் என்னுடைய குரலுக்குப் பின்னால் இருக்கும் சக்தி என் துணைவியாரே. ஒவ்வொரு நாளும், நான் காரியங்களைச் செய்ய ஏதுவாக அவள் எனக்கு வசதி செய்துகொடுக்கிறாள். சமாளிக்க வேண்டிய பல புறம்பான விஷயங்களைப் பற்றி நான் கவலைப்பட வேண்டியதில்லை எனுமளவிற்கு அவள் என் வாழ்க்கையை மாற்றியுள்ளாள். அவள் காரியங்களைக் கவனித்துக்கொள்கிறாள், ஒவ்வொரு நாளும் எனக்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்ய எனக்கான நேரமும் இடமும் இருக்கிறதா என்பதை உறுதி செய்கிறாள். இது ஏதோ ஒரு முறை மாத்திரம் நடக்கவில்லை; மாறாக, எப்போதுமே நடந்துவருகின்றது. ஆக, இந்த ஒளிவீசும் சிலாக்கியத்துடன் மார்த்தாள் ஊழியஞ்செய்ததை நினைக்கும் போதெல்லாம், என்னுடைய சொந்த மனைவியே என் நினைவுக்கு வருகிறாள். நான் செய்வதைச் செய்யும் திறனை அவள் எனக்குத் தருகிறாள். மற்ற **Christian Questions** தன்னார்வலர்களுடன் தொடர்பு கொள்ளும் திறனையும், அவர்களுடன் வேலை செய்ய ஒரு நம்பமுடியாத சந்திக்கும் இடத்தையும் (**venue**) தேவன் எனக்கு வழங்கியுள்ளார். ஆனால், என்னுடைய சொந்த “மார்த்தாள்” இல்லாமல், என்னால் ஒரு நாள் கூட இதைச் செய்ய முடியவில்லை. திரை மறைவிலிருக்கும் ஹீரோவின் மதிப்பை நான் பெறுகிறேன்.*

## ***மரியாள் மனத்தாழ்மையுடன் ஆவிக்குரிய தேவைகளுக்காகப் பணிவிடை செய்தாள்:***

***“. . அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.”***

இது ஓர் உள்ளார்ந்த அனுபவமாகும்; ஆனபோதிலும், இரு சகோதரிகளும் தங்களால் இயன்றதும், அங்கு அவசியமாயிருந்ததுமான ஊழியத்தில் ஈடுபடவே செய்தார்கள்; ஆக, இருவரும் சமமான அளவில் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே/ பாக்கியவதிகளே.



**ஜூலி** :- அக்கலாச்சாரத்தில் பெண்களின் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதைப் பற்றி ஏபி அவர்கள் முன்பு பேசினார்; ஆக, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைப்பதென்பது, அந்நாளில் ஒழுக்கக்கேடாகக் கருதப்பட்டிருக்கக்கூடும். இது ஒரு மிகவும் நெருக்கமான / அந்தரங்கமான செயலாகும். ஆனால், என்னே ஓர் தாழ்மையான செயல் நிகழ்த்தப்பட்டது! அவள் ஒரு துணியைப் பயன்படுத்தியிருக்கலாம், ஆனாலும், தன் தலைமயிரைப் பயன்படுத்தி தூசி படிந்த பாதங்களைத் துடைத்தாள்.

இது அவளுடைய மனத்தாழ்மையையே காண்பிக்கின்றது. மரியாளே தன் சகோதரன் மரித்தபோது எழுந்து சென்று இயேசுவைக் காணத் திடனற்றவளாய் இருந்தவள். அவளால் சமாளிக்க முடியாத அளவுக்கு மனக்கலக்கமடைந்து கவலையுற்றிருந்தாள். இப்போதோ முன்பில்லாதளவிற்கு அவள் இன்னும் தைரியமாக வெளிவர ஆரம்பித்தாள். இது இயேசுவின் பாதமண்டை அமர்ந்ததைக்காட்டிலும் மேலானதாகும். இது ஆழமானதும் பற்றுதலுள்ளதுமான வகையில் உற்சாகமாக / தீவிரமாக ஈடுபடும் செயலாகும். அங்கிருப்பது இயேசு என்பதால் அவள் கவலைப்படவில்லை. அவர் ஏற்கனவே தாம் சந்தித்த ஒவ்வொருவரின் உள்ளத்தையும் புரிந்துக்கொள்பவரென்பதை நிரூபித்திருக்கிறார்.

நாம் வாசித்துக்கொண்டிருக்கும் **யோவான் 12** – இல் உள்ள

*வசனப்பகுதியானது, அனைவரும் எப்படிப்பட்டவர்களென்பதை விளக்குகிறது. மார்த்தாள் மகிழ்ச்சியுடன் பணிவிடை செய்தாள். லாசரு தன்னுடைய கர்த்தருடன் ஐக்கியங்கொண்டிருந்தான். மரியாள் தியாகமும் மனத்தாழ்மையுமுள்ளவளாய் வித்தியாசமான முறையில் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். வேறொருவனுடைய உண்மையான குணமும் அங்கு வெளிப்பட்டது ...*

## யூதாஸின் மோசமான குணம் வெளிப்பட்டது:



***“ அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்கப்போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து: இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான். அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்.”***

> ***ஜூலி*** *:- அமெரிக்காவில் ஒரு முழுநேர குறைந்தபட்ச ஊதியம்பெறும் ஊழியர் சுமார் $15,000 சம்பாதிக்கிறார். யூதாசிற்குப் பட்சமாய் பேசுகிறேன் என்பதாக அல்ல, மாறாக, அங்கு ஒரு தடவை உபயோகத்திற்காகச் செலவிடப்பட்ட பணம் அதிகமே. அந்தப் பணத்தைக் கொண்டு உண்மையில் அநேக தரித்திரர்களுக்கு உணவளித்திருக்க முடியும். எப்படி அவளால் நறுமண தைலத்திற்காக $15,000 செலவழிக்க முடிந்தது?*

*இயேசு மரிக்கப் போகிறார். இவரே உலகத்தின் இரட்சகர்; இவருடைய பணியானது இப்போதிலிருந்து இன்னும் கொஞ்ச*

*நாட்களில் நிறைவேறப்போகிறது. இது, பின்னர் அதே விவரத்துடன் முறையானதை, அவரை அடக்கஞ்செய்ய எதுவானதைச் செய்ய அவர்களுக்கு நேரம் கிடைக்காமல் போகக்கூடிய ஒரு காரியத்தைச் செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தி தந்தது. கீழே அமர்ந்து அவளது தலைமயிரால் தம்முடைய பாதங்களைத் துடைக்கத் தயாராக இருந்த அப்பெண்மணியினுடைய மனத்தாழ்மையின் மற்றும் ஊழியத்தின் மூலமாக அவருடைய பலியானது கனப்படுத்தப்படுகிறது என்பதற்கான தேவனுடைய அதிகாரமாக / அனுமதியாக இயேசு இதனைக் கண்டார். மேலும், யூதாஸ் தரித்திரரைக் குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் அவர்களை ஒரு சாக்காகப் பயன்படுத்தினான். அப்பணம் ஒருவனுடைய கையில் கிடைத்தால், ஒரு சமயத்தில், அதில் ஒரு பணம் கூட இழக்கத்துணிய மாட்டாதளவிற்கு அதிகப்படியான பணம் அது. உண்மையான குணங்கள் வெளிவந்தன! கடிமானவற்றைச் சமாளிக்கக்கூடியவர்களாய் இயேசு தம்மைப் பின்பற்றுவோரை ஆயத்தஞ்செய்தார். அவரைப் பின்பற்ற வேண்டாம் என்று முடிவு செய்தவராய் இருந்த, யூதாசே, ஒழுங்குபண்ண முடியாதவராயும் இருந்தார்.*

## இயேசுவின் ஞானமான மனத்தாழ்மையும் மரியாதையும் இதோ:

***“ அப்பொழுது இயேசு: இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள். தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன்.”***

## மத்தேயு பின்வருவனவற்றைச் சேர்க்கிறார்:

### *மத்தேயு 26:12 – 13 –*

***“ இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது. இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும்***

**சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.”**

***ஜூலி*** *:- மரியாள் தனது செயல்களுக்கு ஆதரவாக எதிர் பேசாதது இது இரண்டாவது முறையாகும். இயேசுவே மீண்டும் அவளுக்காகப் பேசினார், ஏனென்றால் அவளுடைய இருதயம் சரியான நோக்கத்துடன் சரியானதைச் செய்கிறது என்கிற அறிவில் அவள் மனநிறைவடைந்திருந்தாள்.*

*இயேசுவிற்குக் காலம் குறைவாக உள்ளது, அவர் விரைவில் மரிக்கப்போகிறார் என்கிற உண்மையை மரியாளால் உணர முடிந்ததென்பது சுவாரஸ்யமானது.* ***லூக்கா 9:46*** *மற்றும்* ***லூக்கா 22:24*** *– ஆகிய வசனங்களில், சீஷர்கள்* **தங்களில் எவன் பெரியவனாயிருப்பானென்கிற வாக்குவாதத்திற்கு** *அதிக நேரவிரயம் செய்துகொண்டிருந்தார்கள். பல சமயங்களில், பெண்கள் அதிக உள்ளுணர்வு (**intuitive**) உள்ளவர்களாய் இருக்கிறார்கள், எனவே சுவிசேஷச் செய்தியை உள்வாங்கி, நம் சார்பாக தேவன் தமது குமாரனைத் பலியாகக்கொடுத்த அந்த அன்பை உண்மையில் புரிந்துகொள்ளுதல் என்று வருகையில் நமக்கு (ஸ்திரீகளுக்கு) ஓர் அனுகூலமிருக்கவே செய்கிறது (**advantage**).*




**மரியாளும் மார்த்தாளும் இயேசுவின் உண்மையான சிநேகிதிகளாக இருந்ததிலிருந்து, தயக்கமின்றி அவருக்கு ஊழியஞ்செய்யவும், அவரைக் கனப்படுத்தவும், ஆசீர்வதிக்கவும் வெகு ஆயத்தமாக இருந்த உண்மையான சிநேகிதிகளாக வளர்ந்திருந்தார்கள்.**

***ஜூலி*** *:- மரியாளையும் மார்த்தாளையும் நாம் முதன்முதலில் சந்தித்தபோது, அவர்களின் கதை 100 – க்கும் குறைவான வார்த்தைகளில் விவரிக்கப்பட்டிருந்தது. ஆயினும்கூட, இது இன்று நமக்குப் பொருத்தமான பாடங்களுக்கும் மேலதிகமான பாடங்களைக் கண்டறிய எங்களை,*

*ஏபியையும் என்னையும், வழிவகுத்தது. ...*

***ஏபி (Abby)*** *:- இம்முழு கதையுமே, ‘நம்மால் இவ்வளவு தான் கற்றுக்கொள்ள முடியுமென்று நாம் நினைத்திருப்பதைக்காட்டிலும் தேவன் நம்மில் இன்னுமதிகமானதைக் காண்கிறார்’ என்பதைக் காட்டுகிறதென்று நான் நினைக்கிறேன். நாம் அதிக திறன் கொண்டவர்கள் என்பது அவருக்குத் தெரியும். கிறிஸ்துவின் பின்னடியார்களாக, நம்மால் செய்யமுடியுமென நினைத்ததைக்காட்டிலும் அதிகமானதைச் செய்ய முடியுமென்றே அழைக்கப்பட்டுள்ளோம்.*

*ஆண்பெண் இருபாலருக்கும், மார்த்தாளும் மரியாளும் செயல் வீராங்கனைகளே / ஹீரோக்களே. எப்படி உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதையும், எப்படி முற்றிலும் எழுச்சியூட்டும் வகையில் இயேசுவிற்காக நிற்க வேண்டுமென்பதையும் அவர்கள் நமக்குக் காட்டுகிறார்கள்.*

*நீங்கள் மார்த்தாளா (அ) மரியாளா? அனைவரும் நம்முடைய கர்த்தரும் எஜமானருமானவருக்கு எப்படி விசேஷித்த வகையில் ஊழியஞ்செய்ய முடியுமென்று தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும்.*

## ***ஆக, நீங்கள் மரியாளா (அ) மார்த்தாளா?***

புதுசிருஷ்டியின் பொக்கிஷசாலை

see more new booklets and Reprints at

www.foodfornewcreature.com